அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2021/2022

# தமிழ்

## ஆண்டு 9

மாதிரித் தேர்வுத்தாள்

| | |
|---|---|
| **நேரம்:** 150 மணித்துளிகள்<br><br>**நாள்:** சனிக்கிழமை | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 16 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

மாதிரித் தேர்வுத்தாள்

## பகுதி 1 – எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

**1 2 3 4**

1. ஒலியின் அடிப்படையில் குறில், நெடில் எனப் பாகுபாடு செய்யப்படும் எழுத்துகள்
   1. மெய்யெழுத்துகள்
   2. உயிரெழுத்துகள்
   3. சுட்டெழுத்துகள்
   4. சார்பெழுத்துகள்

2. தாளத்திற்கும் இசைக்கும் அமைவாக உடலை அசைத்து நிகழ்த்தும் கலை
   1. ஆடல்
   2. பாடல்
   3. சிற்பம்
   4. ஓவியம்

3. கரடி கத்தும் அதுபோல நரி
   1. அலப்பும்
   2. பிளிறும்
   3. ஊளையிடும்
   4. கத்தும்

4. பறம்பு என்ற மலைப்பகுதியை ஆண்ட மன்னன்
   1. பாரி
   2. செங்குட்டுவன்
   3. வழுதி
   4. கபிலர்

5. ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது வள்ளுவர் வாக்கு. இச் சொல்லியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடு
   1. முக்காற்புள்ளி
   2. ஒற்றை மேற்கோட்குறி
   3. அடைப்புக்குறி
   4. அரைப்புள்ளி

6. வினைப் பகாச்சொல்லாக அமைவது
   1. உறு
   2. தோறும்
   3. நில்
   4. பல்

7. ஈழத்தில் கண்ணகி வழிபாட்டைத் தொடக்கி வைத்த மன்னன்
   1. இமயவரம்பன்
   2. விசயவாகு
   3. கனகன்
   4. கயபாகு

8. ஆசிரியர் வருவதைக் கண்ட மாணவன் நின்று, அவருடன் கதைத்தான். இதில் வந்துள்ள வினையெச்சம்
   1. கண்ட
   2. அவருடன்
   3. நின்று
   4. கதைத்தான்

ஸ்ரீதரித் தேர்வுத்தாள்

1 2 3 4

9. நாம் இயற்கையைப் பேணவேண்டும். இயற்கை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
   1. செயற்கை
   2. மருட்கை
   3. புதுமை
   4. மேன்மை

10. கிளியின் இளையது குஞ்சு போல அணிலின் இளையது
    1. குட்டி
    2. பிள்ளை
    3. கன்று
    4. குருளை

11. கண்காணியின் மேற்பார்வையில் தேயிலை நட்டனர். இதில் வந்துள்ள ஆகுபெயர்
    1. பொருளாகுபெயர்
    2. தொழிலாகுபெயர்
    3. குணவாகுபெயர்
    4. சினையாகுபெயர்

12. முள் + செடி இதன் புணர்ச்சி வடிவம்
    1. முற்செடி
    2. முள்ச்செடி
    3. முட்செடி
    4. முட்ச்செடி

13. பாரியின் அவைக்களப் புலவராக இருந்தவர்
    1. ஔவையார்
    2. கபிலர்
    3. ஒட்டக்கூத்தர்
    4. பரணர்

14. தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்றாக அமைவது
    1. படிப்பாள்
    2. கண்டோம்
    3. பாடுவோம்
    4. எழுதினான்

15. குழந்தையின் கண்ணீர் முத்துகளைக் கண்டு தாயின் உள்ளம் வாடியது. இதில் வந்துள்ள உருவக அணி
    1. கண்ணீர்முத்து
    2. உள்ளம்
    3. குழந்தை
    4. வாடியது

16. நூற்றாண்டு இதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. நூற்று + ஆண்டு
    2. நூல் + ஆண்டு
    3. நூத்து + ஆண்டு
    4. நூறு + ஆண்டு

17. தமிழிலுள்ள தொன்மையான இலக்கண நூல்
    1. நன்னூல்
    2. தொல்காப்பியம்
    3. தண்டியலங்காரம்
    4. புறப்பொருள்வெண்பாமாலை

பரீட்சைத் திணைக்களம்

**1 2 3 4**

18. சிறுவர்கள் விடுமுறையை மகிழ்ச்சியாகக் கொண்டாடினர். இதில் வந்துள்ள அடைமொழி
    1. விடுமுறை
    2. சிறுவர்கள்
    3. மகிழ்ச்சியாக
    4. கொண்டாடினர்

19. பாடினர் இதில் வந்த 'இன்' என்பது
    1. இடைநிலை
    2. வேற்றுமையுருபு
    3. விகுதி
    4. சாரியை

20. சங்க இலக்கியங்களில் ஆடற்கலையில் சிறந்த பெண்களாகக் குறிப்பிடப்படுபவர்
    1. கூத்தியர்
    2. விறலியர்
    3. குறத்தியர்
    4. நடிகை

21. மரங்களிலிருந்து பூக்கள் பொலுபொலு என உதிர்ந்தன. இதில் பொலுபொலு என்பது
    1. இணைமொழி
    2. இரட்டைக்கிளவி
    3. அடுக்குமொழி
    4. அடுக்கிடுக்குமொழி

22. நிலத்தில் கலந்து மட்கும் தன்மையற்றவை
    1. இலைகள்
    2. அரிசி
    3. நெகிழிகள்
    4. செய்தித்தாள்

23. முதியவர் நோயால் மட்டுமன்றி
    1. பசியாலே வருந்தினார்
    2. பசியால் வருந்தினார்
    3. பசி வருத்தியது
    4. பசியாலும் வருந்தினார்

24. தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளின் எண்ணிக்கை
    1. எட்டு
    2. பத்து
    3. பன்னிரண்டு
    4. ஐந்து

25. கதிரவனைக் கண்ட பனிபோல என்னும் உவமைத்தொடர் குறிக்கும் பொருள்
    1. பனி நீங்குதல்
    2. துன்பம் விலகுதல்
    3. எங்கும் பரவுதல்
    4. அழியாது இருத்தல்

(25X1=25புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**2. பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. வைகறை

2. கைத்தொழில்

3. தோள்கொடுத்தல்

4. விடாமுயற்சி

5. செங்கோல்

(5X1=5 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வினாக்களுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பழந்தமிழர் ஆடற்கலையின் வகைகளான வேத்தியல், பொதுவியல் என்பவற்றின் பொருள்களை எழுதுக.

2. காடுகள் அழிக்கப்படுவதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக.

மாதிரித் தேர்வுத்தாள்

3. சிலப்பதிகாரத்தின் சிறப்புப் பெயர்கள் இரண்டினைத் தந்து, அப்பெயர் பெறுவதற்கான காரணத்தையும் எழுதுக.

4. "பாடுகிறான்" இப் பகுசொல்லில் வந்துள்ள பகுதி, விகுதி, இடைநிலை என்பவற்றை எழுதுக.

பகுதி: ______________________

விகுதி: ______________________

இடைநிலை: ______________________

5. உயிரெழுத்துகளின் இனவெழுத்துகளை எழுதுக.

6. உடம்படுமெய்யெழுத்துகளுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

7. 'தாமரைமுகம்' இதில் வந்துள்ள உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை எழுதுக.

உவமானம்: ______________________

உவமேயம்: ______________________

பொதுத்தன்மை: ______________________

(5X2=10 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**4. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியுடன் கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பர்
கமனசித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்
தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே. - திருக்குற்றாலக்குறவஞ்சி

திரிகூடஇராசப்ப கவிராயர்

1. இப்பாடலில் எதன் வளம் கூறப்பட்டுள்ளது?

_______________________________________________

2. நழுவி விழுந்து பழங்களுக்காக இரந்து நிற்பவர்கள் யார்?

_______________________________________________

3. ‘கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்’ இவ்வடியின் பொருளினை எழுதுக.

_______________________________________________

4. இப்பாடலில் கூறப்பெற்றுள்ள இரண்டு விலங்குகளின் பெயர்களை எழுதுக.

_______________________________________________

5. ‘கூனலிளம் பிறை’ என்பதன் பொருள் யாது?

_______________________________________________

(5X1=5 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**5. கீழ்க்காணும் சொல்லியங்களை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. நாம் வாழும் நாடு தூய்மைக்கும் நேரத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

2. புவி வெப்பமடைவதால் பனிப்பாறைகள் உருகுகின்றன.

3. இசை கேட்கும்போது மனம் மகிழ்வடையும்.

4. கோவிட் நோய்த்தொற்றுப் பரவலைக் குறைப்பதற்கான நடைமுறைகளைப் பின்பற்றுவோம்.

5. நாளும் உடற்பயிற்சி செய்தால் நலமாக வாழலாம்.

5x1=5 புள்ளிகள்

**6. கீழ்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் கலைகள்
2. மாந்தரும் இயற்கையும்
3. மாணவரும் வாசிப்புத்திறனும்

உள்ளடக்கம் :

- வாசிப்புத் திறனை வளர்ப்பதற்கான வழிகள்
- மாணவர் வாசிக்கக்கூடிய நூல்கள்
- வாசிப்பதனால் கிடைக்கும் பயன்கள்

(15 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் தேர்வுத்தாள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

நாம் உழைக்கும் பணத்தினை முற்றாகச் செலவு செய்யாது ஒருபகுதியை வைப்பகம், அஞ்சலகம் மற்றும் உண்டியல் போற்றவற்றில் வைப்புச் செய்வதையே சேமிப்பு என்கிறோம். பணம் மாந்த வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை 'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே', 'பணம் பத்தும் செய்யும்' என்னும் பழமொழிகள் உணர்த்துகின்றன. எறும்பு, தேனீ போன்ற உயிரினங்களும் சேமிப்புக்கு எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. இவை உணவு கிடைக்கும்போது உணவைச் சேமிக்கின்றன. பின்னர் உணவு கிடைக்காத காலங்களில் அவற்றைப் பயன்படுத்துகின்றன. அவைபோன்று நாமும் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சேமிப்பால் பணத்தைச் சேர்ப்பது மட்டுமன்றி வீண்செலவுகளையும் தவிர்க்கலாம். எமக்குப் பணம் தேவைப்படும்போது பணத்தை மீளப்பெற்று பயன்படுத்தவும் சேமிப்புத்திட்டம் உதவுகிறது. அவசர தேவைகளுக்குப் பிறர் கையை எதிர்பார்க்காமல் எமது பணத்தையே பயன்படுத்தமுடியும். நாம் வரவுக்கு சற்றுக்குறைவாகவே செலவு செய்யவேண்டுமென வள்ளுவரும் வலியுறுத்துகிறார். நாம் வைப்பகங்களில் சேமிப்பை மேற்கொள்ளும்போது நாட்டுக்கும் நன்மை செய்கிறோம். எமது சேமிப்புப் பணத்தின் மூலம் அரசு பல செயற்திட்டங்களை மேற்கொள்கிறது. இத்திட்டங்களுள் மக்களுக்கான மருத்துவம், கல்வி, போக்குவரத்து போன்றவற்றை மேம்படுத்துதலும் அடங்குகின்றன. எனவே, சேமிப்பானது வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை தரும் ஒரு செயற்பாடு ஆகும்.

"சிறுதுளி பெருவெள்ளம்" போன்று பணத்தைச் சிறிது சிறிதாகச் சேமிப்போம்.

1. சேமிப்பு என்றால் என்ன?

____________________________________________

____________________________________________

2. மனிதனைத் தவிர சேமிக்கும் பழக்கமுடைய உயிரினங்கள் எவை?

____________________________________________

(2 புள்ளிகள்)

3. வள்ளுவர் எதனை வலியுறுத்துகிறார்?

____________________________________________

____________________________________________

மாதிரித் தொகுப்பாளர்

4. பணம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை உணர்த்தும் பழமொழிகள் எவை?

______________________________________________________________

______________________________________________________________

5. சேமிக்கும் பழக்கத்தால் விளையும் நன்மைகள் எவை?

______________________________________________________________

______________________________________________________________

(5X2=10 புள்ளிகள்)

**2. மாறியிருக்கும் சொல்லியங்களை ஒழுங்குபடுத்தி பந்தி அமைப்புக்குப் பொருத்தமான எண்களை கட்டத்தினுள் எழுதுக.**

1. அதனால், அவற்றினால் ஏற்படும் நன்மைகளை மட்டும் பயன்படுத்தி நாம் வாழ்வில் முன்னேறுவோம்.
2. இன்று அறிவியல் வளர்ச்சியால் பல்வேறு பொறிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
3. கல்வி, மருத்துவம், வணிகம், போக்குவரத்து என அனைத்திலும் இவற்றின் பயன் பன்மடங்காகும்.
4. அவற்றுள் கணினி மற்றும் கைத்தொலைபேசி ஆகியவை மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாதவையாக மாறியுள்ளன.
5. ஆனாலும், இவற்றினால் சில தீமைகளும் உள்ளன என்பதை நாம் மறுக்க முடியாது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(5X1=5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

மாதிரித் தேர்வுத்தாள்